**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, குரோதி வருடம் ஐப்பசி மாதம் 27ம் நாள்
**இ.ம.எண். 1/2025**
**இல்**
**அசல் வழக்கு எண். 97/2023**

பாத்திமா ஜின்னா ..மனுதாரர்கள்/ 1ம் பிரதிவாதி

//எதிர்//

1. பெரோஸ்தீன் ..1ம் எதிர்மனுதாரர்/ வாதி

//எதிர்//

2. சந்திரசேகரன்
3. ரோஸியா பானு
4. ஆதார் ஹவுசிங் பைனான்ஸ் லிட்.,
அதற்காக அதன் கிளை மேலாளர், தஞ்சாவூர்.
5. ஆதார் ஹவுசிங் பைனான்ஸ் லிட்.,
அதற்காக அதன் கிளை மேலாளர், பெங்களூர்.
6. தமிழக அரசு சார்பாக மயிலாடுதுறை,
மாவட்ட ஆட்சியர் மூலம்,
7. வட்டாட்சியர், தரங்கம்பாடி.
8. மாவட்ட பதிவாளர், மயிலாடுதுறை.
9. சார் பதிவாளர்,
தரங்கம்பாடி. ..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என் முன்பாக 10.11.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. P. ஸ்ரீதரன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு. R. சுப்பிரமணியன், அவர்கள் ஆஜராகியும் வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்த பிறகு இன்று 13.11.2025 இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரரால் இம்மனுவானது கடந்த 19.08.2024 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம் :**

2. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவார். அசல் வழக்கானது 1ம் எதிர்மனுதாரரால் தனக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல்

செய்யப்பட்டு நிலுவையில் உள்ள நிலையில், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தால் தனக்கு எதிராக கடந்த 19.08.2024 அன்று ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், தற்சமயம் அசல் வழக்கானது தீர்ப்புரை பிறப்பிப்பதற்காக வாய்தாவானது போடப்பட்டுள்ள நிலையில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக வாய்தா போடப்பட்டிருந்த தேதியில் தனக்கு கடுமையாக மஞ்சள் காமாலை ஏற்பட்டு நாட்டு வைத்திய முறையில் சிகிச்சை எடுத்து கொண்டிருந்த காரணத்தினால் தன் வழக்கறிஞரை சந்தித்து எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது என்றும், வேண்டுமென்றோ அலட்சியமாகவோ இருக்கவில்லை என்றும், இத்துடன் தன் தரப்பில் தாக்கல் செய்யும் எதிர்வழக்குரையை ஏற்று உத்தரவிட வேண்டியது அவசியமாகவும நியாயமாகவும் உள்ளதாகவும், எனவே, கடந்த 19.08.2024 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனை குறிப்பாணை</u> :**

3. இந்த மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைநிற்கத்ததக்கது அல்ல. மனுதாரர் வழக்கினை காலதாமதப்படுத்தி திசை திருப்ப வேண்டும் என்பதற்காக வேண்டுமென்றே தேவையான வாய்ப்பு அளித்தும் அவர் வழக்கில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாததால் கடந்த 19.08.2024 தேதி மனுதாரருக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும், ஒருவருட காலத்திற்கு மேல் அமைதியாக இருந்துவிட்டு தற்போது பல பொய்யான காரணங்களை கூறி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கினை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வழக்கினை திசை திருப்ப வேண்டும் என்றும், எனவே, இந்த மனுவை செலவுத்தொகையுடன் மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என கூறியுள்ளார்.

4. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இந்த மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்?

**<u>தீர்வு</u>**

5. மனுதாரர் தரப்பில், அசல் வழக்கில், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தால் மனுதாரருக்கு எதிராக கடந்த 19.08.2024 அன்று

ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு தீர்ப்புரை பிறப்பிப்பதற்காக வாய்தாவானது போடப்பட்டுள்ள நிலையில், எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக வாய்தா போடப்பட்டிருந்த தேதியில் மனுதாரருக்கு கடுமையாக மஞ்சள்காமாலை ஏற்பட்டு நாட்டு வைத்திய முறையில் சிகிச்சை எடுத்து கொண்டிருந்த காரணத்தினால் வழக்கறிஞரை சந்தித்து எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், இத்துடன் தன் தரப்பில் தாக்கல் செய்யும் எதிர்வழக்குரையை ஏற்று உத்தரவிட வேண்டியது அவசியமாகவும் நியாயமாகவும் உள்ளதாகவும், எனவே, கடந்த 19.08.2024 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த மனு அனுமதிக்கப்படாவிட்டால் பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும் என்று கூறப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர் தரப்பில், ஒருவருட காலத்திற்கு மேல் அமைதியாக இருந்துவிட்டு தற்போது பல பொய்யான காரணங்களை கூறி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கினை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வழக்கினை திசை திருப்ப வேண்டும் என்றும், எனவே, இந்த மனுவை செலவுத்தொகையுடன் மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என கூறப்பட்டுள்ளது.

7. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

8. மனுதாரர்கள் தரப்பில் அசல் மனுவில் மனுதாரர் தரப்பு எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக வாய்தா போடப்பட்ட போது மனுதாரருக்கு கடுமையாக மஞ்சள் காமாலை ஏற்பட்டு நாட்டு வைத்திய முறையில் சிகிச்சை எடுத்து கொண்டிருந்ததால் தாக்கல் செய்ய இயலவில்லை என்று கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கினை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாக்கல் செய்துள்ளதால் இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என கூறப்பட்டுள்ளது. மனுதாரர் கூறிய காரணம் ஏற்றுக்கொள்ளகூடியதாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. இருப்பினும், மனுதாரர்கள் தனது தரப்பு வழக்கை எடுத்துக்கூறுவதற்கு அவர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்குவதே நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், இருதரப்பையும் கேட்டு வழக்கினை விசாரித்து தீர்வு காண்பதே முழுமையான தீர்வாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

எனவே, இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. ஆனால் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட காலவிரயத்தை கணக்கில் கொள்ளும்போது இந்த மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிப்பது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**10. முடிவாக, மனுதாரர், எதிர்மனுதாரருக்கு செலவுத்தொகையாக ரூ. 500/- கொடுக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன் இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு 13.11.2025 இல் திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2025.11.13 16:29:51 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**

**தரங்கம்பாடி.**

**இணைப்பு :**

மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2025.11.13 16:29:55 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**